## நோக்கு

சரியான மற்றும் நியாயமான வெற்றிக்காக தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனையற்ற இலங்கை விளையாட்டிற்கு சக்தியூட்டல்

## பணிக்கூற்று

உலக போதைப்பொருள் தடுப்புச் சட்டம் மற்றும் இதன் ஒழுங்கு விதிகளுக்கமைய 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தை அமல்படுத்தல்



## தலைவருடைய வாழ்த்துச்செய்தி

தற்போதைய சமூக பரிணாம வளர்ச்சியின் முக்கிய அம்சமாக விளையாட்டுத்துறையைக் காணலாம் என்பதும், கடந்த தசாப்தங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை விளையாட்டுத்துறை அடைந்துள்ளது என்பதும் இரகசியமல்ல. மிகுந்த துடிப்புடன் விளையாட்டில் ஈடுபட்டுவரும் விளையாட்டு வீர வீராங்கனைகள் கடந்த காலங்களில் பல சர்வதேச அளவிலான வெற்றிகளை இலங்கை மாதாவிற்கு சேர்ப்பதற்கு பங்களிப்பு செய்துள்ளனர் என்பதை இங்கு சுட்டிக்காட்டுவது பெருமைக்குரிய விடயமாகும். தற்போதைய அரசுடன் ஒன்றிணைந்து விளையாட்டுத்துறை அமைச்சானது விளையாட்டுத்துறையின் நலனுக்கான பாரிய சேவையாற்றி வருகின்றது இவ்விடயமானது இலகுவான காரியமல்ல. தற்போது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது நிறுவப்பட்டு ஆறு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இவ் ஆறு ஆண்டு காலப்பகுதிக்குள் தூய்மையான விளையாட்டை உருவாக்குவதற்காக இந்நிறுவனத்தினால் ஆற்றப்படும் சேவையானது பாராட்டுக்குரியதாகும். அவற்றுள் அனைத்து வகையான விளையாட்டுக்களிலும் ஈடுபடும் வீர வீராங்கணைகளுக்கு ஊக்கமருந்து பாவனையற்ற தூய்மையான விளையாட்டில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவை வழங்கக்கூடிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறைந்த பட்சம் மாதமொன்றிற்கு மூன்று தடவைகள் நடாத்தப்படுகின்றன.மேலும், விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு தீங்கு பயக்கக்கூடிய மற்றும் நன்மை பயக்கக்கூடிய பொருட்களைக் கண்டறிவதற்காக பலவகையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டிற்குள் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆய்வுகூடமானது திறந்து வைக்கப்படவுள்ளதால் முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் ஆராய்ச்சி மட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முக்கிய நோக்கமான விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் போன்றவற்றை வேரோடு ஒழித்தல் என்ற தலைப்பின்படி 2019 ஆம் ஆண்டு முழுவதும் வழமையான முறையான மற்றும் அர்த்தமுள்ள பயணத்தை மேற்கொண்டுள்ளது. மேலும் 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் பல நிகழ்ச்சிகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இரத்த மாதிரிகளைப் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும் ஊக்கமருந்து பரிசோதனைகள் இவ்வாண்டிலும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக அமைந்தது என்பது மகிழ்ச்சிதரக்கூடிய விடயமாகும். மேலும் இதனைத்தவிர “சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டட்” மற்றும் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான அதிகாரசபை (ASADA) ஆகியவற்றுடன் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் அடுத்த ஆண்டு விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பலவற்றை நடாத்துவது எமது பிரதான திட்டங்களில் ஒன்றாகும். அதற்கு மேலதிகமாக 2019 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான அதிகாரசபையைச் சேர்ந்த புலனாய்வுத்துறை அதிகாரிகள் வருகைதந்து எமது நிறுவனத்தைச்சேர்ந்த பணியாளர்களுக்கு புலன் விசாரணை நடாத்துதல் தொடர்பாக விளக்கினார்கள், இந்நிகழ்வும் இருதரப்பினரிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விளைவாக இடம்பெற்றதாகும். 2020 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் எதிர்காலத்திட்டங்கள் பல உள்ளதோடு அவ் எதிர்ப்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்து இலங்கையின் தூய்மையான விளையாட்டின் நலன் கருதி எதிர்வரும் ஆண்டில் இலங்கைவாழ் மக்களுக்கான சிறந்ததோர் சேவையை ஆற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்க வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா**
**தலைவர்**



## பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி

வெற்றி, தோல்வி என்பவை விளையாட்டுடன் ஒன்றிணைந்த கோட்பாடுகளாகும். இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது, மேலும் தொன்றுதொட்டு விளையாட்டு வீரர் அல்லது வீராங்கணையுடைய ஒரே எதிர்ப்பார்ப்பு மற்றும் குறிக்கோளானது “வெற்றி” எனும் இலக்கை சுவீகரிப்பதாகும்.

நடைமுறையில் வணிகமயமாக்கப்பட்டுள்ள விளையாட்டுத் துறையையே எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. விளையாட்டில் ஈடுபடும் விளையாட்டு வீரர் அல்லது வீராங்கணை வெற்றி இலக்கை அடைவதை நோக்காகக் கொண்டு மாத்திரமே தமது செயற்திறனை மேம்படுத்துவதற்கு காரணமாக அமைந்துள்ளதும் இத்தகைய வணிகமயமாக்கலாகும். இதன்போது தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் வெற்றி இலக்கை பெறுவதற்காகவே களத்திற்குள் பிரவேசித்தவையாகும்.

இத்தகையதொரு நிலையை தடுப்பதற்காகவும் தூய்மையான விளையாட்டு வீர வீராங்கணைகளைப் பாதுகாப்பதற்காகவும் 2013 இலக்கம் 33 கொண்ட விளையாட்டில் ஈடுபடும்போது ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை தமது 06 ஆம் ஆண்டு பூர்த்தியை 2019 ஆம் நிறைவுசெய்ததுடன் தமது நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்கிறது. 2019 ஆம் ஆண்டில் இந்நிறுவனமானது குறிப்பிடத்தக்க மைல்கற்களை கடந்துள்ளது.

அத்துடன் இந்நிறுவனத்திற்காக நிறுவப்பட்ட புதிய கட்டிட வளாகம் 2019.02.28 அன்று வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டு பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது..

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் புதிய காரியாலய வளாகம் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது அப்போதைய தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ ஹரின் ப்ரணாண்டோ அவர்கள், அமைச்சைச் சார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் கௌரவ அதிதிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இக்கட்டிட வளாகத்தினுள் ஆராய்ச்சிப் பிரிவொன்றும் நிறுவப்பட்டுள்ளது. அதற்கான நிர்மாணப்பணிகள் 2019 ஆம் ஆண்டு முழுவதும் முன்னெடுத்துச்செல்லப்பட்டது. இதற்கான பாதீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப்பெற்றுள்ளது. இவ் ஆராய்ச்சிப் பிரிவானது சகல வசதிகளுடன் கூடிய நவீன ஆராய்ச்சிப் பிரிவாகும். 2019 ஆம் ஆண்டு முழுவதும் இதற்கான நிர்மாணப்பணிகள் இடம்பெற்றதுடன், “Liquid Chromatography Tandem Mass Spectrometer (LCMC) உபகரணமானது நிறுவப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் சர்வதேசத் தரத்திலான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டும்.

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் வழமையான பணிகளான ஊக்க மருந்து சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2019 ஆம் ஆண்டு முழுவதும் வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லப்பட்டது. அதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு 260 ஊக்கமருந்து சோதனைகள் (சிறுநீர்) மற்றும் 20 இரத்தப்பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளின் பாவனையை தடுத்தல் மற்றும் தூய்மையான விளையாட்டின் நலனுக்காக விளையாட்டு வீர வீராங்கனைகள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வீர வீராங்கனைகளின் பெற்றோர் உட்பட விளையாட்டுடன் தொடர்புடைய 3823 பேருக்கு இது தொடர்பான விழிப்புணர்வு வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதிலுள்ள சிறப்பம்சம் யாதெனில், 2019 ஆம் ஆண்டு நேபாளத்தில் இடம்பெற்ற தெற்காசிய போட்டிகளில் பங்கேற்ற இலங்கை வீர வீராங்கனைகள் அனைவரும் ஊக்கமருந்து சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் ஊக்கமருந்து எதிர்ப்பு தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. இப்போட்டிகளின்போது இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகள் தனது தாய்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் விதமாக பல வெற்றிகளை ஈட்டினர்.

இதற்காக இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையுடைய உதவியை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தமை

இப்போட்டியின்போது ஈட்டப்பட்ட வெற்றிகளுக்கு நேர்மறையாக செல்வாக்குச் செலுத்தியிருந்தமை தொடர்பாக பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புவதோடு, எதிர்வரும் காலங்களில் இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் போன்றவற்றின் உதவியுடன் இந்நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான இலக்குகளாக ஆராய்ச்சிப் பிரிவுக்கான ஆய்வுகூடத்தை திறந்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் தேசிய பாரம்பரிய ஆயுர்வேத மருந்துவகைகள் மற்றும் உணவுவகைகளில் தடைசெய்யப்பட்ட பொருட்களின் உள்ளடக்கம் தொடர்பாக கண்டறியக்கூடியதாக

இருப்பதுடன் அவை தொடர்பான அறிவை சர்வதேச சமூகத்திடையே பகிர்ந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். அதேபோல் ஊக்கமருந்து சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 2020 ஆம் ஆண்டில் பாரியளவில் முன்னெடுத்துச்செல்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அனைத்து பிரிவினதும் முன்னேற்றத்தினூடாக மற்றும் உயர்மட்டத்திலான தூய்மையான விளையாட்டு மற்றும் விளையாட்டுக்கான கலாச்சாரத்தை உருவாக்குவதே எம் அனைவரது எதிர்ப்பார்ப்பாகும். 2019 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்தின் வெற்றிக்காக தமது பங்களிப்பை வழங்கிய அனைத்து தரப்பினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் அற்ற தூய்மையான விளையாட்டுக்கான கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் வெற்றியளிக்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**வைத்தியர் சீவலி ஜயவிக்ரம.**

பணிப்பாளர் நாயகம்

# இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

## அறிமுகம்

தற்போதைய விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரை உள்ளார்ந்த திறன் மற்றும் தூய்மையான விளையாட்டே முதலிடம் வகிக்கின்றது.இலங்கையின் விளையாட்டுத்துறையில் காணப்படுகின்ற ஊக்கமருந்து பாவனையை எதிர்த்தல் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் ஒரே மற்றும் முன்னணி நிறுவனமாக இது விளங்குகிறது.

2013 இலக்கம் 33 விளையாட்டில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச்சட்டத்தின் 3 வது பிரிவின் அடிப்படையில் இந்நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் சட்டவாரியமாக இயங்கி வருகிறது.

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான நோக்கமானது விளையாட்டு வீர வீராங்கனைகளால் பாவனைக்குட்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட பொருட்களை வேரோடு அழிப்பதுடன் தூய்மையான விளையாட்டை ஊக்குவிப்பதாகும். இது தொடர்பாக இலங்கையில் செயற்படும் ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும். சர்வதேச ரீதியாக ஊக்கமருந்து பாவனையை எதிர்ப்பதற்காக செயற்படும் சர்வதேச ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களுடன் எமது நிறுவனமானது கூட்டுணர்வுடன் செயற்பட்டு வருகின்றது.

## நோக்கம்

சட்டத்தின் II வது வாசகத்திற்கமைய முகவர் நிறுவனத்தின் நோக்கமாக அமைவது:

(அ) விளையாட்டுக்களில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாட்டை ஒழிப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்

(ஆ) விளையாட்டுக்களுடன் தொடர்புபட்ட ஊக்கமருந்து பயன்பாடு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

## சேவைகள்

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கீழ் குறிப்பிட்ட சேவைகளை வழங்குகின்றது.

1 தேசிய, சர்வதேச மற்றும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊக்கமருந்து பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

2 தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட விளையாட்டு வீரர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3 தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு மற்றும் அதன் பாதக விளைவுகள் தொடர்பாக விளையாட்டு வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஏனைய விளையாட்டுத் துறையில் ஈடுபடுவோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல்

4 நாடு பூராகவும் மாவட்ட ரீதியாக, UNESCO நிறுவனத்தின் நிதி உதவியுடன் விளையாட்டின் போது பயன்படுத்தப்படும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் உட்பட அதன் பாதக விளைவுகள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள் பரிசோதனை தொடர்பாக அறிவுறுத்தும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

5 விளையாட்டில் ஈடுபடும் போது தடை செய்யப்பட்ட பொருள் பயன்பாடு தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்காக பாடசாலை பாடவிதானத்தில் இப் பிரிவினை இணைப்பதற்கான செயற்பாடுகளை வகுத்தல்.

# பணிப்பாளர் சபை



**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா**
தலைவர்



**திரு.சஜித் ஜயலால்**
உறுப்பினர்



**பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ**
உறுப்பினர்



**பேராசிரியர் லால் ஜயக்கொடி**
உறுப்பினர்



**திரு.டி.முத்துகல**
உறுப்பினர்



**வைத்தியர்.அன்வர் ஹம்டானி**
உறுப்பினர்



**திரு.எஸ்.ஐ.எம்.ரோசா**
உறுப்பினர்



**திரு.கே.பி.சிறிபத்தன**
உறுப்பினர்



**திரு.சாமர ஹேரத்**
உறுப்பினர்



**வைத்தியர் ஈ.ஏ.எல்.சீ.கே. எதிரிசிங்க**
உறுப்பினர்

# தற்போதைய பணியாளர் சபை



**வைத்தியர் சீவலி ஜயவிக்ரம**
பணிப்பாளர் நாயகம்



**எச்.எம்.சீ.ஜி.தயாரத்ன**
கணக்காளர்



**ஜே.எம்.ஜே.ஜே.ஜயசுந்தர**
பணிப்பாளர் குழு செயலாளர்
மற்றும் சட்ட உத்தியோகத்தர்



**ஏ.எஸ்..டி.பிகேரா**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



**பீ.என்.ஜே.பர்ணாண்டோ**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



**எஸ்.ஏ.என்.ரஷானி**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்



**ஜீ.என்.எஸ்.பர்ணாண்டோ**
நிர்வாக உத்தியோகத்தர்



**வை.ஏ.யூ.மேதாவி**
தகவல் தொழில்நுட்ப
உத்தியோகத்தர்



**கே.ஆர்.கனகசபாபதி**
மொழி பெயர்ப்பாளர்



**டி.கே.ஜே.சத்துரிக்கா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்



**பீ.ஜி.எம்.ஐ.அருண குமார**
அபிவிருத்தி உத்தியோகத்தர்



**எஸ்.சூரியராணி**
அபிவிருத்தி உத்தியோகத்தர்



**எம்.ஜி.டீ.டி.சேனாரத்ன**
முகாமைத்துவ உதவியாளர்



**எம்.ஜி.எஸ்.ஐ.கருணாதிலக**
முகாமைத்துவ உதவியாளர்



**என்.ஜீ.எஸ்.எச்.விஜேரத்ன**
முகாமைத்துவ உதவியாளர்



**ஏ.ஜி.பீ.டி.திலகரத்ன**
அலுவலக உதவியாளர்



**ஏ.ஜி.எல்.கே.எஸ்.குணவர்த்தன**
அலுவலக உதவியாளர்



**எம்.டி.ஆர்.டி.ஜயவீர**
அலுவலக உதவியாளர்



**ஏ.ஐ.ஆர்.சேனாரத்ன**
சாரதி



**கே.எம்.எல்.வெவேதென்ன**
சாரதி



**கே.பி.சீ.ப்ரேமரத்ன**
சாரதி

# நிறுவன கட்டமைப்பு



தலைவர்
பணிப்பாளர் சபை
பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை)
பணிப்பாளர் (செயற்படுத்தல் மற்றும் அமலாக்கம்)
உதவிப் பணிப்பாளர்
கணக்காளர்
சட்ட உத்தியோகத்தர்/
பணிப்பாளர் சபை செயலாளர்
உதவிப் பணிப்பாளர்
ஆராய்ச்சி
உத்தியோகத்தர்
தகவல் தொழில்நுட்ப
உத்தியோகத்தர்
நிர்வாக உத்தியோகத்தர்
மொழி பெயர்ப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் (02)
தொழில்நுட்ப உதவியாளர் (01)
முகாமைத்துவ உதவியாளர் (02)
சாரதி(04)
அலுவலக உதவியாளர் (03)
அபிவிருத்தி உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
HM
MM 1.1
AR-1
JM
MA-4
MA-3
MA1-1
MA 2-1
PL-3
PL-1

# பணியாளர் குழாம் தொடர்பான விபரங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக 28 பணியாளர்களைக்கொண்ட குழாமுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (31.12.2019 தினத்தில் உள்ளவாறானது)

| | பதவி | சம்பள அளவீடு | பதவி எண்ணிக்கை | தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை | புதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | HM 2-1 | 1 | 1 | |
| 2. | பணிப்பாளர் | HM 1-1 | 2 | | 2 |
| 3. | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப்பணிப்பாளர் | MM 1-1 | 2 | | 2 |
| 4. | கணக்காளர் | MM 1-1 | 1 | 1 | |
| 5. | சட்ட உத்தியோகத்தர் / பணிப்பாளர் சபை செயலாளர் | MM 1-1 | 1 | 1 | |
| 6. | நிர்வாக உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | 1 | |
| 7. | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | AR 1 | 3 | 3 | |
| 8. | மொழி பெயர்ப்பாளர் | MA-4 | 1 | 1 | |
| 9. | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | 1 | |
| 10. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | MA 3 | 3 | 3 | |
| 11. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 4 | 3 | 1 |
| 12. | தொழில்நுட்ப உதவியாளர் | MA 2-1 | 1 | | 1 |
| 13. | சாரதி | PL 3 | 4 | 3 | 1 |
| 14. | அலுவலக உதவியாளர் | PL 1 | 3 | 3 | |
| | மொத்தம் | | 28 | 21 | 7 |

# ஆராய்ச்சிப் பிரிவு

1. 2019 ஆம் ஆண்டுக்காக, இரண்டு புதிய ஆராய்ச்சிகள் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆராய்ச்சிப் பிரிவினால் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை விளையாட்டு வீரர்களில் உணவுக் குறைநிரப்பிகளால் தூண்டப்படக்கூடிய ஆரோக்கியம் சார்ந்த விளைவுகள் – இவ்வாராய்ச்சியானது நெறிமுறைகளுக்கான மறுபரிசீலனைக் குழு, மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள தேசிய குழாமைச் சேர்ந்த, வூசு, கபடி, ரக்பி விளையாட்டு வீர வீராங்கனைகள், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தைச் சேர்ந்த உயர் டிப்ளோமா மாணவர்கள்(NISS) மற்றும் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விளையாட்டு வீர வீராங்கனைகள் போன்றோர் அடங்கலாக 98 விளையாட்டு வீர வீராங்கனைகள் இவ் ஆராய்ச்சியில் பங்குபற்றினர், அவர்களுள் 45 வீர வீராங்கனைகள் இவ்வாராய்ச்சிக்கு தெரிவுசெய்யப்பட்டனர். அந்த 45 விளையாட்டு வீரர்களும் சுகாதாரப் பரிசோதனைகளுக்காக நாராஹேன்பிட்டியிலுள்ள லங்கா மருத்துவமனை ஆய்வுகூடத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு அவர்களுக்கான விரத நிலையின்போதான இரத்த குளுக்கோஸ் அளவு, இலிப்பிட் பற்றிய விபரம், சிறுநீரகம் பற்றிய விபரம், இரத்த அணுக்களின் முழு எண்ணிக்கை தொடர்பான அறிக்கை, சிறுநீர் தொடர்பான முழு அறிக்கை, சிறுநீரின் புரதம்/கீரியட்டின் விகிதம், சீரம் டெஸ்டொஸ்டரோன் மட்டம் போன்றவை பரிசோதிக்கப்பட்டதுடன் மருத்துவ நிபுணர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் உடற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. வினாக்கொத்துகள் மற்றும் மருத்துவ பரிசோதனை அறிக்கைகளின் ஆய்வு ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் “statistical software package SPSS “ மூலம் கணினியில் செலுத்தப்பட்டது. இவ்வராய்ச்சிக்கான சுருக்கமானது (Abstract) தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது

- விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கான சிறுநீர் மாதிரிகளின் சோதனை முடிவில் பக்டீரிய மாசுபாட்டின் விளைவு - ஆரம்பகட்ட இலக்கிய ஆய்வு மற்றும் பிற ஆரம்பகட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. “LC-MS/MS” கருவி கொள்முதல் செய்யப்படும்வரை இவ்வராய்ச்சி தொடர்பான கண்டுபிடிப்புகள் நிலுவையில் உள்ளது. இவ் ஆராய்ச்சி தொடர்பான “ethics” இனைப் பெறுவதற்காக நெறிமுறைகளுக்கான மறுபரிசீலனைக் குழு, மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையில் நிறுவப்பட்டுவரும் இரசாயன ஆய்வுகூடத்திற்கான LC-MS/ MS உபகரணமானது கொள்முதல் செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய பரிசோதனை செயற்பாடுகள் நிறைவுசெய்யப்படவுள்ளது

2. "LC-MS/ MS” ஆய்வுகூட உபகரணம் அவற்றுக்கான தரவுகளை சேமித்து வைக்கும் பகுப்பாய்வு முறைகள், நைதரசன் ஜெனரேட்டர், மேற்கோளுக்கான நியமம், பயன்பாட்டுக்கான இரசாயனப்பொருட்கள் மற்றும் நைதரசன் ஆவியாக்கல் அமைப்பு போன்றவற்றை கொள்முதல் செய்வதற்கான தொழிநுட்ப ஆவணங்கள் தயாரிக்கப்பட்டது. மதிப்பீட்டு செயன்முறையை மேற்கொள்ளதற்காக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு தேவையான உதவிகளை வழங்கியமை.

3. ஆய்வுகூடத்திற்கு தேவையான Analytical balances, Top Loading Balance, Ultra-Pure Water Purification plant, Water Distillation Unit, Universal Centrifuge machine, Micro Centrifuge machine Ultra Sonic bath, Water Baths, Vortex Mixer, Laboratory refrigerator, Biomedical freezer, Laboratory Shaker, Heating Mantel, Magnetic Stirrer, Autoclave, Drying Cabinet, Conductivity Meter, pH Meters, Steam Bath, TDS Meter, Micro Pipettes போன்ற உபகரணங்களை கொள்முதல் செய்வதற்காக தொழிநுட்ப ஆவணங்கள் (Technical Specification) தயாரிக்கப்பட்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உதவிகளை வழங்கியதோடு அவற்றை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. "இலங்கையில் தயாரிக்கப்படும் அரிஷ்ட வகைகளில் காணப்படக்கூடிய செயற்திறனை அதிகரிக்கக்கூடிய பதார்த்தங்கள் மற்றும் எதனோலின் அளவறிபகுப்பு" என்ற தலைப்பின் கீழான ஆராய்ச்சிக் கட்டுரையின் பிரதி "Ceylon Medical Journal" இடம் கையளிக்கப்பட்டது.

5. "இலங்கை விளையாட்டு வீர வீராங்கணைகளின் உணவுக்குறைநிரப்பியின் பாவனை மற்றும் பழக்கவழக்கங்கள்: ஒரு வெட்டுமுக ஆய்வு என்ற தலைப்பின் கீழ் ஆய்வின் முழுமையான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

**ஊக்கமருந்து பரிசோதனைகள**

| இல. | விபரம் | சனவரி | | பெப்ரவரி | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | 2 | 2 | 25 | 25 |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | 25 | 25 |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2 | 2 | | |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1 | ESA 1 | | |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | | | | |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | | | | |

| இல. | விபரம் | மார்ச்சு | | ஏப்ரல | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | 33 | 33 | 17 | 17 |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 33 | 33 | 17 | 17 |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 5 | ESA 2<br>GHRF 1<br>Steroid pro-file 2 | | |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | | | | |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | 2 | 2 | | |
| இல. | விபரம் | மே | | ஜூன் | |
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | 35 | 30 | 20 | 19 |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 20 | 21 | 12 | 4 |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 15 | 9 | 8 | 15 |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | 3 | |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | 6 | 2 | 6 | 7 |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | | | | |

| இல. | விபரம் | ஜுலை | | ஆகஸ்ட் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | **30** | 6 | 5 | 55 |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 20 | 6 | 3 | 52 |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 10 | | 2 | 3 |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 3 | | 1 | ESA 2<br>GHRF 6 |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | 6 | | **6** | **2** |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | | | | |
| இல. | விபரம் | செப்டம்பர் | | ஒக்டோபர் | |
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | **30** | **5** | **30** | **59** |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | **20** | **5** | **20** | **59** |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | **10** | | **10** | |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | **2** | **Steroid profile** 1 | **2** | |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | **1** | **9** | | |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | | | | |

| இல. | விபரம் | நவம்பர் | | டிசம்பர் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 1. | சிறுநீர் பரிசோதனை-மானிடர் | 5 | 9 | 5 | - |
| | போட்டியின்போதான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 3 | 8 | 3 | - |
| | போட்டிக்குவெளியேயான பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2 | 1 | 2 | - |
| | ESA/GHRF/IRMS சிறுநீர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1 | | 1 | - |
| 2. | இரத்த பரிசோதனை-மானிடர் | | | | |
| 3. | சிறுநீர் பரிசோதனை - விலங்குகள் (குதிரை) | | | | |

## மானிடர்களுக்கான பரிசோதனை - சாராம்சம் 2019

## சிறுநீர்

| இல | விளையாட்டு | ஊக்கமருந்து சோ-தனைகளின் எண்ணி-க்கை | ஊக்கமருந்து பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்-தர்ப்பங்கள் |
|---|---|---|---|
| 1. | ரகர் | 19 | 1 |
| 2. | மெய்வல்லுனர் போட்டி | 120 | 2 |
| 3. | சைக்கிளோட்டப்போட்டி | 19 | 2 |
| 4. | பழு தூக்குதல் | 24 | - |
| 5. | கரப்பந்தாட்டம் | 4 | - |
| 6. | குத்துச்சண்டை | 4 | - |
| 7. | கிரிக்கட் | 16 | - |
| 8. | நீச்சல் போட்டி | 13 | - |
| 9. | மல்யுத்தம் | 9 | 1 |
| 10. | உடற்கட்டமைத்தல் போட்டி | 3 | - |
| 11. | வலு தூக்குதல | 2 | - |
| 12. | ஜூடோ | 7 | - |
| 13. | காற்பந்தாட்டம் | 7 | - |
| 14. | கபடி | 5 | - |
| 15. | கயிறிழுத்தல் | 4 | - |
| 16. | வலைப்பந்தாட்டம் | 3 | - |
| 17. | கூடைப்பந்தாட்டம் | 1 | - |
| | மொத்தம் | 260 | 6 |

## மானிடர்களுக்கான பரிசோதனை சாராம்சம் 2019

## இரத்தம்

| இல | விளையாட்டு | ஊக்கமருந்து சோ-தனைகளின் எண்ணி-க்கை | ஊக்கமருந்து பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்-தர்ப்பங்கள் |
|---|---|---|---|
| 1. | மெய்வல்லுனர் போட்டி | 5 | - |
| 2. | கபடி | 4 | - |
| 3. | மல்யுத்தம் | 3 | - |
| 4. | ரகர் | 2 | - |
| 5. | Water polo | 1 | - |
| 6. | நீச்சல் போட்டி | 2 | - |
| 7. | கராட்டே | 1 | - |
| 8. | வூசு | 2 | - |
| | மொத்தம் | 20 | 0 |

நடாத்தப்பட்ட ஊக்கமருந்து பரிசோதனைகளின் எண்ணிக்கை:

| | |
|---|---|
| சிறுநீர் பரிசோதனை | - 260 |
| இரத்த பரிசோதனை | - 020 |
| மிருகங்களுக்கான பரிசோதனை (குதிரைகள்) | - 002 |

## விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

2019 ஆம் ஆண்டில் ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கீழ்வருமாறு.

| மாதம் | விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றியோரின் எண்ணி-க்கை |
|---|---|---|
| சனவரி | 11 | 424 |
| பெப்ரவரி | 02 | 105 |
| மார்ச்சு | 03 | 615 |
| ஏப்ரல் | - | - |
| மே | 05 | 156 |
| ஜூன் | 04 | 127 |
| ஜூலை | 04 | 297 |
| ஆகஸ்ட் | 05 | 574 |
| செப்டம்பர் | 04 | 598 |
| ஒக்டோபர் | 03 | 84 |
| நவம்பர் | 09 | 766 |
| டிசம்பர் | 04 | 77 |
| மொத்தம் | 54 | 3823 |



விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்கு(பதுளை)



BMICH இல் இடம்பெற்ற “Youth Expo" கண்காட்சியின்போது



இராணுவ மெய்வல்லுநர் விளையாட்டு சங்கத்துக்கான கருத்தரங்கு



விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்கு(பதுளை)

“Outreach” நிகழ்ச்சி

| திகதி | இடம் | விபரம் |
|---|---|---|
| 2019/02/23,24 | BMICH இல் இடம்பெற்ற கண்காட்சி | “Momentum” Youth Expo 2019 |
| 2019.08.22 | சுகததாச விளையாட்டரங்கு | நீச்சல் வீர வீராங்கணைகளுக்காக |
| 2019.11.29 | சுகததாச விளையாட்டரங்கு | ஜோன் டார்பட் போட்டியின்போது பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக |

# தகவல் தொழில்நுட்பப்பிரிவு

இணையத்தளத்தினை மறுவடிவமைத்து அதனை செயற்படுத்துதல்

காரணங்கள்: பழைய வடிவமைப்பானது காலாவதியான நிலையில் காணப்படுவதுடன் போதிய தகவல் இன்றி காணப்படுகிறது. புதிய வடிவமைப்பானது ஊக்கமருந்து தடுப்பு சம்பந்தப்பட்ட அதிகமான விபரங்களை உள்ளடக்குவதுடன் மிகப் பரந்தளவிலான தகவல்களை கொண்டுள்ளது அத்துடன் வினைத்திறனான செயற்பாடுகளை கொண்டுள்ளது எனவே மிகவும் விளக்கமானதாக அமையப்பெற்றுள்ளது.

- “TOP TIPS” என்றழைக்கப்படும் ஊக்கமருந்து தடுப்பு விழிப்புணர்வு தொடர்பான சமூக வளைத்தளங்களினூடான விழிப்புணர்வு நிகழ்ச்சி (facebook-Antidoping Srilanka,Twitter -@SLAntiDoping)

இந்நடமாடும் செயலியானது விளையாட்டு வீரர்களுக்கு, இலங்கையில் கொள்முதல் செய்யப்படும் மருந்துவகைகளின் தடைநிலையை உலக ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவர் நிறுவனத்தின் (WADA) தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியலுடன் ஒப்பிட்டு அறிந்துகொள்ள உதவுகிறது. விளையாட்டின்போது மற்றும் விளையாட்டில் ஈடுபடாத சந்தர்ப்பங்களில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகள் அடங்கிய பட்டியலொன்று உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தினால்(WADA) வெளியிடப்படுகிறது.

இச்செயலியானது குறிப்பாக இலங்கை விளையாட்டு வீரர்கள் மற்றும் வைத்தியர்களுக்கு தொடர்ச்சியாக மருந்துவகைகளின் தடைநிலையை கண்காணிக்க உதவுகிறது.

செயலியின் வெளியீட்டுக்கான பிரச்சார காணொளி வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் Web Help ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது

“DR app” ஆனது 2019, ஜுலை மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

“DR app” இன் பயன்பாட்டை ஊடகத்தின் மூலம் ஊக்குவித்தல்

தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் ” திருமதி.வை.ஏ.யூ.மேதாவி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செயலி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2019.09.04 அன்று “Rise and Shine” நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

இது குறித்து கூடுதலான விழிப்புணர்வை ஏற்படுத்த எம்மால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றோம். இதன்மூலம் இலங்கை விளையாட்டு வீரர்கள் அறியாமையினால் ஊக்கமருந்து பாவனைக்கு உட்படுவதைத் குறைப்பதே எமது நோக்கமாகும்.

விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு “DR app” தொடர்பாக வழங்கப்பட்ட பயிற்சி

1. தேசிய வலைப்பந்தாட்ட குழாம்
2. தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் தேசிய கபடி குழாம் மற்றும் கடற்கரை கரப்பந்தாட்ட குழாம்
3. தேசிய கடற்கரைக்கான கரப்பந்தாட்ட குழாம்
4. தெற்காசிய விளையாட்டுக்களில் பங்குபற்றும் முப்படையைச்சேர்ந்த மெய்வல்லுனர் போட்டி குழாம்
5. “க்ரீடா சக்தி” நிகழ்ச்சி

6“ இலங்கை இராணுவம் – மெய்வல்லுனர் குழாம்

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் **- (https://slantidoping.org/)**

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் உத்தியோகபூர்வ இணையத்தளமானது மும்மொழிகளிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் இணையத்தளத்தின் திட்டமிடல் மற்றும் செயலாக்க நடவடிக்கைகள் எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் கீழ்வரும் வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- Custom interface, including layout, colors, fonts
- Website architecture & NAV
- Webpage template design with common theme
- Logo display in every page
- Test site
- Database
- Mobile friendly pages, tables, forms and images etc
- Sitelock security
- SSL
- Homepage with the SLADA highlights, data should retrieve from the database and quick
- links to most important resources
- Integrate with social media
- Main Slider (2 or 3 images) for home page and sub sliders (1or 2 images) for each other pages with relevant compressed images. Main slider should have graphical images which display our main objectives
- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் உத்தியோகபூர்வ இணையத்தளமானது 38 பக்கங்களைக் கொண்டுள்ளது.
- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கான தளவரைப்படம் கீழ்வருமானது அமைக்கப்பட்டுள்ளது

[1] – [38] pages

| Home Page [1] | SLADA | Awareness on Doping | Social Engagements | Codes | Doping Control and Testing | Resources | Contact [38] |
|---|---|---|---|---|---|---|---|
| | [2] Board | [8] Prevention of Doping | [15] Anti-Doping Lectures | [20] Anti-Doping Agreements and codes | [24] Athlete must know<br>[25] Doping Samples | [30] Useful Links | |
| | [3] Organizational Structure | [9] Prohibited Drugs and Methods | [16] Exhibitions | [21] WADA Code | [26] Doping Test Result Management<br>[27] Anti-Doping Rule Violations | [31] Prohibited List 2019 | |
| | [4] SLADA Team | | | | | | |
| | [5] Committees and Panels | [10] TUE | [17] Research | [22] Sri Lanka Anti-Doping Code | [28] Doping Test Statistics<br>[29] Anti-Doping Terms | [32] WADA Code | |
| | [6] History and Annual Reports | [11] Whereabouts and ADAMS | [18] Events Calendar | [23] Legislation on doping | [24] Athlete must know<br>[25] Doping Samples | [33] International Standards on Anti-Doping | |
| | [7] Contact Us | [12] Doping Test Procedure | [19] Stakeholders | | [26] Doping Test Result Management<br>[27] Anti Doping Rule Violations | | |
| | | [13] Sanctions and Appeal Procedure | | | [28] Doping Test Statistics<br>[29] Anti-Doping Terms | [34] SLADA App | |
| | | [14] FAQ | | | | | |

# சட்டரீதியான விசாரணைகள்

**"B"** மாதிரி பகுப்பாய்வு தொடர்பான விசாரணைகள்

விளையாட்டு வீரர் திரு.காலிங்க குமாரகே தொடர்பான **"B"** மாதிரிக்கான பரிசோதனை 18.01.2019 அன்று இந்தியாவிலுள்ள தேசிய ஊக்கமருந்து பரிசோதனைக்கான ஆய்வுகூடத்தினால் அவருடைய அனுமதியோடு மேற்கொள்ளப்பட்டதுடன் அப் பரிசோதனையின் போதும் அவரது மாதிரியில் தடைசெய்யப்பட்ட பொருட்களில் உள்ளடங்கியிருப்பது உறுதிசெய்யப்பட்டது.

ஐ.கே.சாமர நுவன் மற்றும் சஜினி மனோரி ஜயசிங்க ஆகிய இரு கபடி வீரர்களின் ஊக்கமருந்து பாவனையானது அவர்களுடைய சிறுநீர் மாதிரிகளின் பரிசோதனை மூலம் உறுதிசெய்யப்பட்டது. மேலும் **"B"** பகுப்பாய்வு தொடர்பான விசாரணையானது 25.01.2019 அன்று இடம்பெற்றது. மேலும் மேற்குறப்பிட்ட வீர்ர்கள் **"B"** மாதிரிக்கான பரிசோதனையை முன்னெடுத்துச்செல்ல சம்மதமில்லை என எழுத்துமூலம் அறிவித்தனர். தடகள வீர்ர்களான சாமர மதுஷான் மற்றும் டப்ளியு.என்.எஸ்.குமார ஆகியோரது **"B"** மாதிரி பகுப்பாய்வு தொடர்பான விசாரணையானது 16.05.2019 அன்று இடம்பெற்றதுடன் அவர்கள் இருவரும் **"B"** மாதிரிக்கான பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை என எழுத்துமூலம் அறிவித்தனர்.

திரு.சனத் ஜயசிங்க மற்றும் திரு. அசேன் டில்ஷான் ஆகிய சைக்கிளோட்ட வீர்ர்களின் **"B"** மாதிரிக்கான பரிசோதனை தொடர்பான விசாரணைகள் முறையே 08.06.2019 மற்றும் 22.08.2019 ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன்போது அவர்கள் இருவரும் **"B"** மாதிரிக்கான பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை என எழுத்துமூலம் அறிவித்தனர்

இதற்கு மேலதிகமாக ரகர் வீரர் திலின விஜேசிங்க மற்றும் மல்யுத்த வீரர் டி. கே. பீ. மதுஹர்ஷ ஆகியோரது **"B"** மாதிரி பகுப்பாய்வு தொடர்பான விசாரணையானது 24.12.2019 அன்று இடம்பெற்றதுடன் அவர்கள் இருவரும் **"B"** மாதிரிக்கான பரிசோதனைக்கு சம்மதிக்கவில்லை என எழுத்துமூலம் அறிவித்தனர்

# ஒழுக்காற்று விசாரணைகள்

திரு சாமர.நுவன் மற்றும் திருமதி.சஜினி மனோரி (கபடி)ஆகியோருக்கான மேன்முறையீட்டு விசாரணை 04.04. 2019 அன்று இடம்பெற்றது. எவ்வாறாயினும் திரு சாமர.நுவன் எனும் வீரருக்கு தொடர்ச்சியான அறிவித்தல்களின் பின்னும் விசாரணைகளுக்கு அவர் சமூகமளிக்கவில்லை.

தடகள வீராங்கனை மெலனி பெந்தரகே தொடர்பான ஒழுக்கான விசாரணையானது

- 2019 மே 09
- 2019 ஜுன் 06
- 2019 ஜுன் 25
- 2019 ஜுலை 02

ஆகிய தினங்களில் இடம்பெற்று நிறைவடைந்ததுடன் அது தொடர்பான எழுத்துமூல சமர்ப்பிப்பானது

இருதரப்பு வழக்கறிஞர்களாலும் தாக்கல் செய்யப்பட்டது. ஒழுக்காற்று விசாரணை தொடர்பான தீர்ப்பானது 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதி வழங்கப்பட்டது.

தடகள வீரரான காலிங்க குமாரகே தொடர்பான ஒழுக்காற்று விசாரணையானது இறுதியாக 2019 ஜூலை மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றதுடன், அது தொடர்பான வாக்குமூல சமர்ப்பிப்பானது இரு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டது. 2019 ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வாக்குமூல சமர்ப்பிப்பானது இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் தாக்கல் செய்யப்பட்டதுடன் குறித்த, விளையாட்டு வீரர் தொடர்பான வாக்குமூல சமர்ப்பிப்பானது 2019 செப்டம்பர் மாதம் 04 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. 2019 நவம்பர் மாதம் இவ் ஒழுக்காற்று விசாரணை தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட்டது.

குத்துச்சண்டை வீரர் திரு. W.A.C.இந்திக பெரேரா தொடர்பான ஒழுக்காற்று விசாரணை 25.06.2019 அன்று நிறைவடைந்ததுடன் அது தொடர்பான இறுதி தீர்ப்பானது 2019 செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி ஒழுக்காற்று விசாரணைக் குழவினால் வழங்கப்பட்டது.

## மேன்முறையீட்டு விசாரணைகள்

ரகர் வீரரான சுபுன் தில்ஷான் தொடர்பான மேன்முறையீட்டு விசாரணையானது 2019 மார்ச்சு மாதம் 13 ஆம் திகதி இடம்பெற்றது. மேலும் ரகர் வீரரான தனுஷ்க பெரேரா தொடர்பான மேன்முறையீட்டு விசாரணையானது 2019 ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி நிறைவடைந்ததுடன் அது தொடர்பான இறுதித் தீர்ப்பானது எதிர்வரும் காலங்களில் வழங்கப்படவுள்ளது.

தடகள வீரர் காலிங்க குமாரகே மற்றும் தடகள வீராங்கனை மெலனி பெந்தரகே தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

குத்துச்சண்டை வீரர் இந்திக பெரேரா ஆல் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவானது, மேன்முறையீட்டு குழுவிடம் கையளிக்கப்பட்டது.

## தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல்

2019 ஆம் ஆண்டுக்கான தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் அடங்கிய 2110/2 இலக்க விசேட வர்த்தமானியானது 11.02.2019 அன்று வெளியிடப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானிக்கான அமைச்சரவைக்குழு அங்கீகாரமானது பெறப்பட்டதுடன் 2019 ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது..

2019 ஆம் ஆண்டுக்கான தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியலுக்கான பாராளுமன்ற அங்கீகாரமானது 2019 மே மாதம் 21 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## விசேட நிகழ்வுகள்

1. இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் வைபவரீதியான திறப்பு விழா 2019 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடைய தலைமையில் இடம்பெற்றது. இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் புதிய கட்டிட வளாகமானது சுகததாச விளையாட்டரங்கு வளாகத்தின் "Block D" யில் நிறுவப்பட்டுள்ளது.

2. இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணியாளர்களுக்கான அலுவலக முகாமைத்துவம் தொடர்பான ஊக்குவித்தல் நிகழ்ச்சியானது திரு. தம்மிக முத்துகல அவர்களால் நடாத்தப்பட்டது.

3. இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை மற்றும் அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு(ASADA) அதிகாரசபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தந்திற்கிணங்க ASADA மற்றும் "Australian Federal Police" ஐச் சேர்ந்த அதிகாரிகளால் புலனாய்வு மற்றும் விசாரணை தொடர்பான நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

## 2019 இற்கான விசேட நிகழ்வுகள் - வெளிநாடு

- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம 2019 மார்ச் மாதம் 12 - 14 திகதி வரை சுவிற்சலாந்து லுசானில் இடம்பெற்ற "INADO Workshop" மற்றும் "WADA ADO Symposium" ஆகியவற்றில் பங்கேற்றார்.

- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் மொழிபெயர்ப்பாளர் செல்வி.கே.ஆர்.கனகசபாபதி 2019 மார்ச் மாதம் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் பங்களாதேஷ்,டாக்காவில் இடம்பெற்ற "SARADO Education Officer Training Program" இல் பங்கேற்றார்.

- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் தலைவர் பேராசிரியர். அர்ஜுன. டி .சில்வா, 2019 ஏப்ரல் மாதம் 24 - 26 திகதி வரை, நேபாளம், கத்மண்டுவில் இடம்பெற்ற "SARADO" பணிப்பாளர் சபைக் கூட்டம் மற்றும் "CCQ " கருத்தரங்கில் பங்கேற்றார்.

- இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின், பணிப்பாளர் நாயகம் வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம ஜூன் மாதம் 27-28 திகதி வரை கொரியாவில் இடம்பெற்ற "2019 KADA Anti-Doping Seminar in Asia" கருத்தரங்கில் பங்கேற்றார்.



தலைமைத்துவ நிகழ்ச்சியின்போது



பணியாளர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சியின்போது



Water Rafting நிகழ்ச்சியின்போது

## வெளிப்புற பயிற்சி நிகழ்ச்சி - 2019

இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை வருடாந்தம் ஏற்பாடு செய்யும் பணியாளர் குழாமுக்கான வெளிப்புற பயிற்சி நிகழ்ச்சி 2019/08/10 மற்றும் 2019/08/11 ஆகிய இரு தினங்களில் கித்துல்கல "Adventure Base Camp" இல் வெற்றிகரமாக இடம்பெற்றது.

இதன்போது இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணியாளர் குழாமுக்கான தலைமைத்துவத்திற்கான பயிற்சி கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஊக்குவிப்பு மனப்பான்மை மற்றும் குழு உணர்வை வெளிப்படுத்தக்கூடியவாறான பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு "Water Rafting" உட்பட பல நீர் சார்ந்த விளையாட்டுகள் இதன்போது உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வுக்காக எமது நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சீவலி ஜயவிக்ரம அவர்கள் பங்கேற்றதோடு அவருடைய வழிகாட்டலின்படி 2019 வருடாந்த வெளிப்புற பயிற்சி நிகழ்ச்சி விசேடமான பரிமாணத்தைப் பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்ற பணியாளர் குழாமானது புதிய அனுபவங்கள் மற்றும் நேர்மறையான எண்ணங்களை பெற்றதாக அவர்களுடைய கருத்துகளின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது .

# 2020 ஆம் ஆண்டுக்கான இற்கான இலக்குகள்

- 2020 இல் இடம்பெறவிருக்கின்ற தெற்காசிய போட்டிகளின்போது பல ஊக்கமருந்து சோதனைகளை மேற்கொள்வதற்கு இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- கவ்வியமைச்சுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஊக்கமருந்து தடுப்பு தொடர்பான பகுதியொன்றை இலங்கை பாடசாலை பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

- நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் ஊக்கமருந்து சோதனைகள் பலவற்றை மிகவும் தீவிரமாக நடாத்துவதற்கு இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது திட்டமிடப்பட்டுள்ளது.

- ஊக்கமருந்து கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களாக பரந்த அறிவைப் பெற்றுள்ள மற்றும் 10 வருடத்திற்கு மேலான வெளிநாட்டு அனுபவத்தைப் பெற்ற இலங்கை ஊக்கமருந்து கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்ளை வெளிநாட்டைச் சேர்ந்த அதிகாரிகளின், பயிற்றுவிப்பதற்கு எதிரப்பார்க்கப்பட்டுள்ளது.

- மாதிரி விதிமுறைகளை அமல்படுத்துவது தொடர்பாக சிரேஷ்ட வழக்கறிஞர். திரு.மனோஹர ஜயசிங்க அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் கூடியவிரைவில் அது தொடர்பான வரைபை சரிபார்க்க ஒப்புதல் தெரிவித்தார் அதேவேளை இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் சட்ட உத்தியோகத்தரை இலங்கையின் சட்டம் மற்றும் உலக ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனத்தின் விதிமுறைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை பிரித்தறியுமாறு அறிவுறுத்தினார்.

- அவுஸ்திரேலிய விளையாட்டு ஊக்கமருந்து தடுப்பு அதிகாரசபை மற்றும் இலங்கை ஊக்கமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தகவல் தொழிநுட்பத்தின் மேம்படுத்தப்பட்ட பிரயோகம் தொடர்பான அறிவைப் பயன்படுத்தி தகவல் தொழிநுட்பத்துறையை மேம்படுத்தல்.

**இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம்**
**31ம் திகதி மார்கழி 2019 இல் உள்ளவாறான ஐந்தொகை**

| | குறிப்பு | 31ம் திகதி மார்கழி 2019 | 31ம் திகதி மார்கழி 2018 |
|---|---|---|---|
| | | **(இலங்கை ரூபாய்)** | **(இலங்கை ரூபாய்)** |
| சொத்துக்கள் | | | |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| காணி,கட்டிடங்கள்,தளபாடங்கள் | 1 | 208,530,974.49 | 5,412,026.32 |
| மூலதனக் குறைவேலைகள் | 2 | 65,268,791.03 | 189,140,409.10 |
| மொத்த நிலையான சொத்துக்கள் | | **273,799,765.52** | **194,552,435.42** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 3 | 2,018,589.00 | 1,110,839.86 |
| வருமதிகள் | 4 | - | - |
| காசும் ஏனையவையும் | 5 | 2,933,415.77 | 1,195,174.60 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **4,952,004.77** | **2,306,014.46** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **278,751,770.29** | **196,858,449.88** |
| மூலதனமும் பொறுப்புக்களும் | | | |
| **நிதியிடல் :** | | | |
| திறைசேரி நிதி | 6 | 266,081,050.16 | 183,068,042.87 |
| ஏனைய நிதி | 7 | 2,951,335.38 | 3,577,310.38 |
| திரண்ட நிதியம் | 8 | 1,537,638.00 | 819,827.00 |
| | | **270,570,023.54** | **187,465,180.25** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நிறுத்திவைக்கப்பட்டுள்ள நிதிய | 9 | 5,673,632.20 | 7,392,700.13 |
| சென்மதிகள் | 10 | 764,928.17 | #REF! |
